ஓலை 46 | ஓசை 163 | துலை (அக்டோபர்) 2023

# அகர முதல இலக்கியப் பேரவை

அகமும் தமிழே!
முதலும் தமிழே!!



## கவிதை வார இதழ்

தமிழ்ப்பணியில்: அகர முதல இலக்கியப் பேரவை (ம) சிவம் அறக்கட்டளை

# அறிவோம் வள்ளுவம்!



**வேண்டாமை யன்ன விழுச்செல்வம் ஈண்டில்லை**
**ஆண்டும் அ:தொப்ப தில்.**

எந்தப் பொருளையும் விரும்பாமல் இருப்பது போன்ற சிறந்த செல்வம் இப்பூமியில் வேறு ஒன்று இல்லை; வான் உலகத்திலும் இதற்கு ஒப்பானது இல்லை.

**Translation:**

No glorious wealth is here like freedom from desire;
To bliss like this not even there can soul aspire.

**Explanation:**

There is in this world no excellence equal to freedom from desire; and even in that world, there is nothing like it.

/Aagaramuthalaa

அகர முதல இலக்கிய பேரவையில்
இணைய-9597887847

# அகர முதல
## இலக்கியப் பேரவை

### நிர்வாகக்குழு

செல்வமுத்துகுமரன் குணசேகரசிவம்
சிவம் அறக்கட்டளை,முகையூர்

### இதழாசிரியர்கள்

அ.வில்சன்
குமர.தர்மசீலன்

### வடிவமைப்பு

அ.வில்சன்


### அலுவலக முகவரி

97, குஞ்சிதபாதம் நகர், டவுன் ஸ்டேசன் தென்புறம்,
மயிலாடுதுறை - 609001

# கற்றோர் சிறப்பு

**பா வகை: செம்மொழி இன்னிசை சிலேடை வெண்பா (செம்மொழி இன்னிசை இரட்டுற மொழிதல்)**

**கல்வி - பொன்**

இருக்கும் இடத்தில் இதமாய் ஒளிரும்
பெருகுமே இன்பமும் பேறெனப் பெற்றிட
செல்வத்துள் எல்லாம் சிறந்தே விளங்குமாம்
கல்வியும் பொன்னுமே காண்

பொருள் - கல்வி கற்றவர் எங்கு சென்றாலும் ஒளிர்வர்... கல்வி கற்றதனால் இன்பம் பெருகும். அதுவே செல்வத்துள் இணையில்லா செல்வம்

பொன், தான் இருக்கும் இடத்தில் ஒளிரும்.
பொன்னைப் பெற்றிட பொங்கிடுமே இன்பம். பொன் என்றுமே விரும்பும் செல்வம்



**சுடர் - கற்றோர்**

இருளை அகற்றி எழிலினைக் கூட்டும்
பருகும் அளவில் படரும் வெளிச்சம்
பலகை மாறினும் பட்டொளி வீசும்
திலகமாம் கற்றோரும் சுடர்

பொருள் - சுடர் இருளை அகற்றும். ஒளிபாய்ச்சி எழிலூட்டும். எரியும் சுடரைப் பொறுத்தே அதனதன் வெளிச்சம். பல விளக்கிற்கு ஒளி தந்தாலும் அதன் ஒளி பட்டொளி வீசியே திலகம் போல் இருக்கும்

**கற்றோர்**

அறியாமை இருளை அகற்றி அறிவைச் சீராக்கும்
கற்றோரின் பெருமை
கற்றிட்ட நூலலவே
பெற்ற அறிவைப் பகிர்ந்திட பகிர்ந்திட பெருகுமே கல்வியின் புகழ்
திலகமாய் கற்றோரே விளங்குவர்

கவிஞர் பூர்ணிமா சங்கர்,கோயமுத்தூர்

# ஹைக்கூ

1
காய்ந்த மரக்கிளைகள்
மிகவும் அடர்த்தியாக
ஒன்றித்து அமர்ந்த பறவைகள்

1
tree branches got dried
be densely
birds perched together

2
கடலலைகள்
கரையில் வந்து குவியும்
கிளிஞ்சல் ஓடுகள்

2
sea water
gets gathered on shore
mussel shells

3
தூரத்து வெளிச்சம்
இராப்பயணத்தில் நம்பிக்கை தரும்
கலங்கரை விளக்கம்

3
distant light
gives hope during night travel
light house

4
பள்ளிச்சுற்றுலா
தோழர்கள் குட்டிச்சண்டை
பேருந்து ஜன்னல் இருக்கைக்கு

4
education tour
petty quarrelling between friends
for window seat.

5
விருப்பமின்றி சுமக்கிறதோ?
ஒலியெழுப்பி எதிர்ப்பு
அமர்ந்ததும் இரும்பு நாற்காலி

5
does it carry unwillingly
soon after sitting on
iron chair

6
ஓட்டை வழி
உள்நுழைகிறது ஏழைவீட்டில்
திருட்டு மழை

6
through hole
enters into poor's house
tricky rain

7
வீதியில் நனையும் நாய்க்குட்டி
அழுது கொண்டிருக்கும்
சிறுமியின் கண்கள்

7
pup getting drenched on street
be weeping
eyes of girl.

Trans: Bommidi Mohandoss

கவிஞர் மரு ஜலீலா முஸம்மில்,ஏறாவூர்(இலங்கை)

# உவப்பத் தலைக்கூடி!

வாழ்வது ஒருமுறை
வாழ்வோம் சிறப்போடு.

உறவுகளை அழைத்து
உவந்தேக் கூடுவோம்.

உள்ளொன்று வைத்து
உள்ளியது வேறாக

திரித்தேப் பேசாது
சிரித்தேப் பேசுவோம்.

ஊரெல்லாம் உறவாக
ஊக்கத்தோடு உழைப்பர்.

ஒருவீட்டு விழாவிற்கு
ஒருமையுடன் வருவர்.

சேர்ந்தேப் பணியைச்
சோராது செய்வர்.

நாளும் கிழமையும்
நலிந்தோர்க்கு இல்லையென்று

தனியே இருக்காது
இனிதே கூடுவர்.

இரக்கும் முன்பே
கரவாது அளித்தே

நலம் பேணிட
நாளும் முனைவர்.

கணத்தில் காலமாற்றம்
கணக்காய்ப் பேச்சு

செல்பேசி கையிலிருந்தால்
செல்லுமிடம் எல்லாம்

அதனோடு தடவல்.
அன்புடையோர் வந்தாலும்

இன்முகத்தோடு உரையாட
கன்றிய முகத்தோடு மறுப்பு.

உவப்பத் தலைக்கூடி
உள்ளம் மகிழ்தல்

இன்றைய நாளில்
இல்லாமல் போனது.

கன்றாய்த் துள்ளியோர்
கன்றிய முகத்தோடு

சோர்வாய் ! உரையாட
ஆர்வமுள்ளோர் யாருமின்றி!



கவிஞர் செ.கலைவாணி,மெல்போர்ன்

# ஆயம்மா

என் உயிரோடு
நீ கடந்தாலும்
உன்னை காண
முடியாமல்
தவிக்கின்றேன்
மறுமுறை பிறந்தால்
ஒருமுறை உன்
மடியில் மீண்டும்
தவழ்வாய் என!



அழுகை வருகையில்
உன் மடி
எப்போதும்
மறுத்ததால்
தோன்றும் கவலைகள்
திசை மாற செய்ய
உன் கதைகள்
என்றும்
மறந்ததில்லை.

கவிஞர் ஸ்ரீவள்ளி,கோவை

# இவ்வுலகில்

## இவ்வுலகில்
***************

வேடிக்கை நிரம்பியது
உலகம்.
வேடிக்கைக் காட்டினால்
உன்னைக் கோமாளி
என்று சொல்லும்.
வேடிக்கைப் பார்த்தால்
உன்னை ஏமாளி
என்று சொல்லும்.
கோமாளியாகவும் இல்லாமல்
ஏமாளியாகவும் இல்லாமல்
புத்திசாலியாக
வாழப் பழகிக் கொள்
இவ்வுலகில்.



/

## உயர்வு
*********

என் நிலைக்கு
உயரப்பார்க்கிறாய்.
நல்லதென்று
வரவேற்கிறேன் உன்னை.
அதனினும்
உயர்ந்து கொண்டிருக்கிறேன்
நான்
சிறிதும் பொறாமையின்றி.

## எச்சரிக்கை
**************

நெருங்குகிறது தேர்தல்
வாக்கு சேகரிக்க
வருகிறார்கள் வேட்பாளர்கள்.
நாம் ஆகாமலிருக்க வேண்டும்
பலி ஆடுகளாய்.

கவிஞர் பாரியன்பன் நாகராஜன்,குடியாத்தம்

# வார்த்தைகளின் பெருமானம்

வார்த்தைகளுக்கும்
பெறுமானமுண்டு
பயன்படுத்தும் விதத்தில் தான்
விலையின் நிர்ணயங்கள்

வார்த்தைகள் நம்முடையது
எண்ணத்தின் வண்ணங்களை
வன்முறையாய்
எடுத்தெறிந்து விடாதீர்கள்.

சிலர் புரிந்து கொள்வார்கள்
சிலர் பிரிந்து செல்வார்கள்
சொல்லும் வார்த்தைகள்
கொல்லும் வார்த்தைகளாக
மாறிவிடாது இருக்கட்டும்



விழும் அடிகளை விட
உதிரும் வார்த்தைகள் தரும்
வலி மிக அதிகம்.

அனுபவிக்காதவரை
அது யாருக்கும் புரிவதில்லை
விடியலில் தானே தெரிகிறது
சூரியனின் அருமை
உதிர்த்த பின் தானே புரிகிறது
வார்த்தைகளின் கொடூரம்.

பெண்ணிடம் பயன்படுத்தும் வார்த்தையில் உள்ளது
அழகிய ஆண்மை
அமைதியாகிப் போவதிலும்
பேசுவதிலும் உள்ளது
அழகிய பெண்மை

தீயினால் சுட்ட புண் உள்ளாறும்
ஆறாதே நாவினால் சுட்ட வடு

கவிஞர் ஷெண்பகச் சோலையாள்,ஆய்ஷ்,இலங்கை

# இப்படிக்கு இறைவன்

அன்பர் பணிசெய உனை ஆளாக்கினேன்
இன்ப நிலையை நீயே அடைந்தாய்
ஆலயம் தொழுவதிலும் சாலச் சிறந்தது
ஆங்கோர் ஏழைக்கு எழுத்து அறிவித்தலே
ஏழைக்கு உணவிட்டு பசிப்பிணி நீக்குகிறாய்
கோழைக்குத் தன்னம்பிக்கைக் கரம் நீட்டுகிறாய்
உன்னுள் வசிக்கிறேன் என்னைத் தேடாதே
ஆலயம்விட்டுச் செல்கிறேன்

இப்படிக்கு இறைவன்



கவிஞர் குரு.ஜெயந்தி,சிதம்பரம்

# ஏதேதோ என் எண்ணங்கள்!

குறைகள் இல்லாத
நிறைகள் உண்டோ?
குயவன் மண்பாண்டத்திலும்
குவலயத்திலும் உண்டே!

நதியின் சலசலப்பில்
நுரையேறும் சிற்றோடையிலும்
நறுமணம் வீசும்
நந்தியாவட்டை மலர்களாலும்

இயற்கை எழில்
இயக்கும் விடியலிலும்
இன்றெல்லாம் பார்க்க
இரவின் மயக்கத்திலும்

இதயத்தை பறிகொடுக்கும்
இனிய தருணங்களிலும்
இலக்கணமும் பரவிய
இலக்கிய சேவைகளிலும்

குறை தேடுவதில்
குணம் இல்லையே
குறிஞ்சி மலரும்
குளத்தில் பூப்பதில்லையே

ஏதேதோ
என் எண்ணங்கள் ஏகிய
வடிவமைப்புகளில் பொங்கி
வடியுதே நெஞ்சத்திலே.



கவிஞர் இரஜகை நிலவன், மும்பை

# மனம்

நினைவுகள் எனும் நீர்வீழ்ச்சியில்
தள்ளாடும் ஓடம்
சிரித்தவைகளை எண்ணி அழுகிறது
அழுதவைகளை எண்ணிச் சிரிக்கிறது
மறந்து விட்ட எல்லாவற்றையும்
மறக்காமல் நினைவூட்டுகிறது.
பிரமாண்டமானவைகள் கூட
சாதாரணமாய் தோன்ற
சாதாரணமானவை எல்லாம்
பூகம்பமாக மாறுவதும் இங்கு தான்.
கடிவாளம் போட நினைத்தால்
கட்டுக்கடங்காமல் அலைபாயும்
அதன் போக்கில் விட்டுவிட்டால்
தப்பாமல் தாளம் போடும்
சிறுகுழந்தையாய் பிடிவாதம் செய்யும்
சத்தமிட்டு கதறி அழும்
அடிக்கடி காயம் படும்
மந்திரமாய் புன்னகை செய்யும்
பட்டாம்பூச்சியாய் சிறகை விரிக்கும்
கூட்டுப் புழுவாய் அடங்கிக் கொள்ளும்
வானவில்லென வண்ணங்கள் விரியும்
இருளில் நிழலென காணாமல் போகும்
விழவைத்து வேடிக்கை பார்க்கும்
தட்டிக் கொடுத்து சுவாரசியம் சேர்க்கும்
என்னை விட்டு தள்ளி நிற்கும் சிலநேரம்
என்னில் இணைந்து பயணிக்கும் பலநேரம்
புரியாத எத்தனையோ புதிர்களில் மனமும் ஒன்று.



கவிஞர் பேரா.கீர்த்தனா.பு,திருப்பூர் மாவட்டம்

# 14.சிலப்பதிகாரம் (பதினான்கு)

13. புறஞ் சேரி இறுத்த காதை .
1. இரவுப் பொழுதில் நடைப் பயணம் .
"அடிகளே இவளின் பூ பாதங்கள் வெயிலில் நடக்க முடியவில்லை
செடி கொடிகள் நிறைந்த சோலை பக்கமாக இரவில் போகலாமா
நெடிதானாலும் பாண்டியன் ஆட்சியில் பயம் கொள்ளல் ஆகாது"
துடிப்புடன் கேட்ட கோவலன் மனம் குளிர அடிகளும் "சரி" என்றார்.

2. மூவரும் பயணம் செல்லுதல் :
"செல்லும் வழியில் வன விலங்குகள் அச்சுறுத்தி இடம் வலம் திரியும்
கொல்லும் என்ற அச்சம் இல்லாமல் என்னோடு வருவாயாக" என்றான்
வெல்லும் வழி அறிந்து வலி தெரியாமல் அவளை அழைத்துச் சென்றான
நில்லாமல் பயணம் தொடர காட்டுக் கோழி கூவ பொழுது புலர்ந்தது

3. கவுசிகன் தந்த மாதவியின் காதல் மடல் :
கிழக்கே வானம் வெளுக்க ஒரு பொய்கையை நோக்கிச் சென்றான்
பழக்கமான கவுசிகன் கோவலனைக் கண்டான் "இவனா அவன்?" ஐயம்
தழுவாது துவளும் மாதவிக் கொடியிடம்,"மாதவிபோல் நீயும் மறுகலாமா?"
பழுதில்லாத கவுசிகனிடம் கேட்டான்,"மாதவி உடலும் உள்ளமும் நலமா?"
"நின் தந்தை, மாசாத்துவானையும் , உன் அன்னையும் பிரிந்து வந்தாய்
உன் பிரிவால் மாணிக்கத்தை இழந்த நாகம் போல் வருந்துகிறார்கள்
தன் மகனைப் பிரிந்தவர் ஏவலர்கள் மூலம் உன்னைத் தேடுகிறார்கள்
பன்மன் இராமன் இல்லாத அயோத்திபோல் நீ இல்லாத புகார் உளது"
(பன்மன் : தாமரை)
மாதவியும் அப்படித்தான் நீ வருவாய் என வாசல் திறந்தே இருக்கிறது
சோதனையாக வசந்தமாலை திருமுகத்தையும் திருப்பிவிட்டாய்
வேதனையில் பசலை நோய் படர மேனி நூலாக மெலிந்து விட்டாள்
காதலின் ஆற்றாமையைக் கூறும் இக் கடிதத்தைப் படித்துப்பார் ''



4. மாதவியின் கடிதம்
தங்கள் பாதங்களின் முன் விழுந்து வணங்குகிறேன் மன்னியுங்கள்
உங்களைப் பிரிந்து வாடும் நான் பாவி. இது விதியின் விளையாட்டு
மங்கலமான வாழ்க்கையை இழந்தேன் மீண்டும் தாமரை மலரும்.
சங்கடத்துடன் அம்மடலை பெற்றோரிடம் தருமாறு பணித்தான்.

5. பாணர்களும் இணைய மதுரை பயணம் தொடர்கிறது :
மடலோடு கவுசிகன் கிளம்ப, தன் இருப்பிடம் வந்தான் கோவலன்
வடகாற்றின் குளிரில் அவதியுறும் கண்ணகிக்கு வருந்தினான்
தடம் பார்த்து கவுந்தியடிகள் இரவில் அழைத்துச் சென்றார்கள்
நடந்து செல்ல பாணர்கள் மீட்டும் இசை இதமாக இருந்தது .

பாணர்கள் செங்கோட்டு யாழின் இசையில் மயங்கி நடந்தனர்
காணாமல் போனது இதுவரை வந்த களைப்பும் உடல் வலியும்
வீணாக மதுரையை நினைத்து பயந்த மனது , பயம் நீங்கியது
வாணாள் உள்ளவரை பாணர்கள் துணை இருந்தால் நலமே

6. மூவரும் வைகை நதியை கடந்து செல்லுதல் ;
மக்களுக்கு உணவு அளித்து புலவர்கள் போற்றும் நதி வைகை
எக்காலமும் ஆறாக ஓடும் வையை என்ற பொய்யாக் குலக்கொடி
பக்கமாக கடந்து செல்லும் கண்ணகியின் துயரில் கலங்கினாள்
துக்கத்தை மலர்களை மேலாடையாக போர்த்தி மறைத்தாள் வைகை.

...தொடரும்

கவிஞர் ந.திருக்காமு

# இஸ்ரேலில் பாயும் இரத்த ஆறு

தூரத்தில் வெடிக்கும்
குண்டுகளின் சத்தம்
மரண பயத்தை
கண்ணெதிரே காட்ட
நாவுகள் வறண்டு
பேசிட எதுவுமின்றி
உயிர் தப்பிக்க
வழிதேடும் ஈர விழிகளோடு
நீல வானமும்
கரும் புகையில் உருமாறி
கார் மேகங்களாய் அழுகிறது




வடக்கையும் தெற்கையும்
ஆக்ரமிப்பதிலும் தக்க வைப்பதிலும்
குறியாயிருக்கும்
அணிகள் எதுவும்
அகதிகளாய் மாறும்
உயிர்களின் மேலொரு
ஈவிரக்கமின்றி போர் தொடுக்க.

உலரும் நாவுகளும்
உலகெங்கும்
தேடி அலைகிறது
இரசாயண குப்பிகள் விளையாத
சமாதான மண்ணை.

திரும்பிய இடமெல்லாம்
பரவும் கரும் புகையால் இருண்டு கிடக்கும் இஸ்ரேலில்
அடிக்கடி வெடித்துச் சிதறும் குண்டுகளின் வெளிச்சத்தில்
மனித சடலங்கள் மிதக்கும் இரத்த ஆறுகளின் சத்தங்களுக்கிடையே
பெற்றோரை பறிகொடுத்த மழலையின் அழுகுரல் மட்டும்
தொலைக்காட்சி திரைகளில் திரும்பத் திரும்ப ஒளிபரப்பாகும்
கொடூர நிகழ்வைக் காணும் விழிகளின் மனதில்
கசிந்த ஈரம் இன்னும் உலராமல் வடிகிறது.

கவிஞர் கோவை ஆனந்தன்,கிணத்துக்கடவு

# என்னுள் அவள்!

என்மீது அவளின் பார்வை
ஆலமரத்தின் விதையாய்
ஆனால் அவளோ என்னுள்
அம்மரத்தின் விருட்சமாய்.



கவிஞர் முனைவர் க குமார்,சித்தாலிக்குப்பம்

# தீயின் தாகம்

சிக்கி முக்கியில் உரசுண்டு பிறந்தவன்
சிறியரும் பெரியரும் பாராமல் பழகுறான்
சிறிய பொறியிலும் மிளிர்ந்திடும் ஒளிரவன்
சீறிடும் தாகத்தால் உருக்குலைந்து நிற்கிறான்.

விறகின் வீரியத்தில் உடன்கட்டை ஏறியவன்
வாயுவின் உடன்பாட்டை சமனாகிக் கேட்கிறான்
நெருப்பென்றும் புகையென்றும் வெறுத்ததால் அணையுறான்
நெஞ்சத்து வேட்கையால் பிளம்பாகிப் பொங்குறான்.

கல்லடுப்பில் வேகாத சமையலால் நோகுறான்
மின்னடுப்பில் வெந்த உணவால் சாகுறான்
தீயின் தாகந்தீர காட்டுத்தீயாய் எரியுறான்
ஆங்காரக் கோபத்தில் அகிலமெல்லாம் பரவுறான்.



கவிஞர் த.அரசிகுமாரி,அண்டூர்

# கடாரம் கொண்டான்

கற்பனைக்கெட்டாத கடற்படை
அந்தக்காலத்தில்!
அயல்நாடு சென்று வெற்றி
வாகை சூடிய முதல் தமிழ் மன்னன்!
கடற்கரைப்பரப்பும், கடல்சார்
வாணிபமும் தமிழ் வணிகர்
கட்டுப்பாட்டில்!
கடல்வழியே எத்தனை ஆயிரம் மைல்கள்
எத்தனைக் கப்பல்கள்!
எத்தனையெத்தனை பாய்மரக்கப்பல்கள்
எத்தனை மனித இயந்திரங்கள்!
எத்தனை பெரும் முயற்சிகள், சாகசங்கள்
கடாரத்தோடு, பதிமூன்று
தெற்காசிய நாடுகள்!
அடங்கி நடக்கவும், திரை செலுத்தவும்
ஒத்துக்கொண்டவர்கள் அரசை நடத்த!
எம்மதமும் தழைத்தோங்க,
பண்போடு, வீரத்தோடு ஆட்சி புரிந்த,
எம் தமிழ் மண்ணின் சிறந்த மன்னன்
கடாரம் கொண்ட ராஜேந்திர சோழன்!



கவிஞர் லதா சுப்ரமணியன்,சென்னை-119

# இவள் யாரோ?

ஈரங்கதிரோடு கதைத்திடும்
நுவலி தான் இவளும்.
புணரி சூழ
புதைந்த குரலை சப்தமாய்
இருகரம் பிரித்து ஆசைத் தீர
கூச்சலிடும் காரிகைதான் இவளும்.



இம்சைக்காரனின் இளவரசியும்
இளைப்பார அவனிடமே
தோள் தேடும் தாரகையேதான் இவளும்.

இரவி உதயத்திலும்
அவன் மாரோடு இருப்பதாய்
திண்டுகளை அணைத்தே
துயிலும் கனவுக்கன்னிதான் இவளும்.

பாதம் ஆர்கலியின்
அலைக்களுக்கு பிடிபடாமல்
துள்ளி விளையாடும் மான் போல
வந்த பருவ மங்கையோ இவளும்.

குழவியிடத்தே அவனி மறக்க
புன்னகை பொழிந்தே
ரணம் மறைத்திட
விழி நீர் மட்டும் ஒழிவு மறைவாய்.


கரம் ஓங்கிடும் ஆண்மை வெறுத்து
அமைதியாய் அன்பு காக்க..
ஆரவாரம் காதலில் செய்து இரசிக்க
இம்சை செய்யும் காதலை பெற்றவளும்
இவள்தான்.
இவளே தான்.

அந்த இவள் நான்தான்.
சில வரிகள் மெய்யாக.
சில வரிகள் கற்பனையில் நான் வாழும்
வாழ்வாக.

கவிஞர் ச.கார்த்திகா,பழநி

# ஏந்த இயலாச் செல்வம்

காலம் கடந்துவிட்டது
வந்தவர் போனவரெல்லாம்,
வயதில் பெரியோரெல்லாம்
இங்கிதம் அறியாத
யதார்த்தமெனும் முட்டாள்களெல்லாம்
கேள்விக்கனைகளை
சிரிப்பிலே குத்திவிட்டு செல்கின்றனர்
என்ன தவறென்று புரியவில்லை
யாரிடம் வினவுவது என்றும்
தெரியவில்லை
காணும் இடமெல்லாம்
கையில் ஏந்தி நகரும்
தம்பதியினரை பார்க்கும் பொழுதெலாம்
ஒரு நிமிடம் தாய்மையுயும்
தகப்பன்தனத்தையும்
இடமாற்றிக் கொள்கிறது
இளம் தம்பதிகளின் மனது.
இன்றுவரை.



கவிஞர் சே கார்கவி

# தூரல்

கொண்டல் தழுவ
பொழியும் வானம்!
மழை முத்தமிட
வெட்கும் நிலம்!

தென்றல் தாலாட்ட
அசையும் மரம்!
மொட்டு மலர்ந்திட
மொய்க்கும் வண்டு!

காலம் தந்த
பரிசு நினைவு!



கவிஞர் செ.தமிழ்நேயன்,தமிழ் நாடு

# வருவதில்லை


பொய், பொறாமை,
வஞ்சகம், வயிற்றெரிச்சல்,
காழ்ப்புணர்ச்சி,
எதிர்மறை எண்ணங்கள் என்று
எந்த ஒன்றையும்
சுமந்துக் கொண்டு
என் வீட்டை நோக்கி
எந்தொரு பறவைகளும்
வருவதில்லை!



கவிஞர் அ.செல்வராஜ்,உடுமலைப்பேட்டை

# மாயமென்னை செய்திட்டாயே


மதியழகால் மயக்கினாயே
மந்தாரமாக சுற்றினாயே
மல்லுகட்டி துரத்தினாயே
மனைவியென்றே வினவினாயே
மசக்கையும் ஆக்கினாயே
மதிநுட்பமாய் பேசினாயே
மதமதப்பாய் நிறுவினாயே
மல்லிகையாய் மணத்தாயே
மறுமலர்ச்சியும் செய்தாயே
மனமகிழ்வையும் தந்திட்டாயே
மணவாழ்விலும் நுழைந்திட்டாயே
மடல் எழுதி குவித்தாயே
மடிமீதே தவழச்செய்தாயே
மணியோசையாய் லயித்தாயே
மந்திரமும் ஜெபிக்காமல்
மாயமும் செய்யாமல்
மாற்றமும் செய்த மன்னவனே
மாயமென்னை செய்திட்டாயே!



கவிஞர் நீலாசுபாஷ்,ஆக்கூர்

# நமக்குள் விடியல் பிறக்கட்டும்

நகர்கின்ற பூமிக்கு விடியல் வந்துசேர்கிறது
விடிந்தாலும் மனதுமட்டும் இருளுக்குள் இருக்கிறது
சுற்றுகின்ற இருவிழி பூமிக்கு வெளிச்சம் ஆகிறது
உள்ளிருக்கும் மனவொளி உந்தனுக்கு வெளிச்சம் ஆகிறது
பார்க்கின்ற கோணத்தில் பார்வை மாறித்தெரிந்திடுமே
பார்வையை சரிசெய்தால் விடியல் வந்து சேர்ந்திடுமே
நடக்கும் தீமையிலும் நன்மையுண்டு என்பார்கள்
நடப்பவை நன்மைக்கே என்றும் அதை சொல்வார்கள்
ஏற்றுக் கொண்டால் மாற்றம் கொள்ளும் மனது
உந்தன் வாழ்க்கை ஏற்றம் கொள்ளும் உணரு
இலக்குகள் நிர்ணயம் ஆகும் பொழுது
இயல்பினில் மாற்றம் பெறுவதே இயல்பு
மாறாமல் இருந்திட்டால் கடையிலென்ன நிலைபெறும்
சில நினைவுகள் மறக்கையில் பல நிகழ்வுகள் சிறந்திடும்
நிரந்தம் என்று ஒன்றில்லை என்பதை உணர்ந்திடும்
உயிருக்கே வாழ்வில் எல்லாம் அமைந்திடும்.



கவிஞர் கோ.தனுசன்,மட்டக்களப்பு(இலங்கை)

# சீர்குலைத்து விடாதீர்கள்

கஷ்டத்தையே பார்க்கவிடாது
கண்ணிமைக்குள் பிள்ளைகளைக்
காத்து வளர்க்கும் பெற்றோரே
கேட்டவுடன் வாங்கி கொடுக்குமுன்
சேமிப்பினை உணர்த்தினீரோ?
படிப்போடு பண்பாட்டையும்
பாங்குடன் உரைத்தீரோ?
பெண்மையைப் போற்றிட
உம் ஆண்சிங்கங்களுக்கு உரைத்தீரோ?
பெண்ணியம் கற்றுத் தரும்முன்
பொறுமையையும் கற்பித்தீரோ?
வசதியாக அமர்ந்தே
பேருந்தில்வரும்போது வயதானவர் வந்திட
எழுந்து இடம் தர இயம்புனீரோ?
வீட்டிற்கு வருபவரை மகிழ்வாய்
"வா" வெனஅழைக்க சொன்னீரோ?
உலகமே உள்ளங்கைக்குள் ஆயினும்
உறவுகளை கொண்டாட சொன்னீரோ?
செல்லம் எனும் பெயரில்
செருக்கினைப் போதிக்காதீர்
அவசியம் எனும் பெயரில்
ஆடம்பரத்தைத் திணிக்காதீர்
சிங்காரச் சிட்டுகளை நீரே
சீர்குலைத்து விடாதீர்கள்.



கவிஞர் ஷீலாதேவிஅருணாசலம்,நாகர்கோவில்

# மரங்களின் கூக்குரல்

பறவையின் எச்சில் சிந்திய இடங்களில்
மறக்காமல் முளைத்தது பரந்த காடுகள்!

களைப்பாற இடம்தந்து சலிக்காமல் பழம்தந்து
உளமாற வாழ்த்தாமல் உயிர்போக அழித்தான்!

பூச்சியின் மோகம் தாவித் தாவி
வீச்சியில் சிதறிய விரிந்த சோலை!

சுகமாக விளையாட நிழலாற கண்ணயற
நகரமாக மாற்றியே சொர்க்கத்தை குலைத்தான்!

கால்நடை சாணம் நடந்த பாதையில்
சூல் கொண்ட பசுமைப் புல்வெளி!

கோடைக்கு குளிர்ச்சி வாடைக்கு வசந்தம்
பீடை அறியாது வீசி எறிந்தான்!

காற்றின் வேட்டை கடந்த பாதையில்
பறந்த விதைகள் சிறந்த மரங்கள்!

ஓரறிவு தழைக்க பிறவறிவு ஒத்துழைக்க
பொதுவறிவு அற்ற ஆறறிவு எதற்கு?



கவிஞர் திருமதி மோ.கோமளாநேதாஜி

# ஆண்



ஆண் அரடி முதல்
ஆறடி வளர்ந்து
புற முதுகில் வலிகளை சுமப்பவன்
வலிகளை உருக்கி
வார்த்தைகளை அடிக்கி
உச்சம் தொட உழைப்பவன்
ஆண் நெடிலின் அடையாளம்
அன்பின் புகலிடம்
அறிவுரையின் தொடக்கம்
ஆண்களிடமே நெறிமுறைகள் கையாளப்படுகின்றன
அதுவே விதிமுறையாக செயல்படுகின்றன
ஆண் சுயநலமற்றவன்
அன்பின் பண்பினை போற்றுபவன்
பெண்ணின் அரவணைப்பில் தோற்பவன்
ஆண் தன் வியர்வையை உழைப்பிற்கு விற்பவன்
அவன் பிறப்பு முதல் இறப்பு வரை கற்பவன்
வலிகளை உணர்ந்து சிரிப்பவன்
ஆண் உலகின் மகத்தான படைப்பு
விஞ்ஞானி முதல் வீரம் வரை வியப்பே ஆணின் சிறப்பு

கவிஞர் இர மணிகண்டன்,வங்கனூர்

# துலாக்கோல்

மனிதயினம் இன்று
மாற்றத்தைக் கொள்ளுதே
புனிதம் தொலைத்து
புண்படுத்தும் மனங்களை



துலாக் கோலாய்
தூய்மையானது நீதி
வழங்கியே வாழ்வது
வரமான பொறுப்பு

நேர்மை வழியில்
நேர்த்தியாய் நடந்து
வேர்வை சிந்தி
வேலையில் உழைத்து

நாளைய சமூகத்தின்
நல்வழித் தோன்றலாய்
கோழை இல்லாத
கோமகனாய் நடந்தே

பேதங்கள் களைந்து
பேணிடும் உறவாய்
பாதகம் செய்யாது
பண்பினை வளர்த்தே

அனைவருக்கும் சமத்தும்
அநீதியின்றி வேண்டும்
வினைகள் போக்கி
விடியலைக் கொடுக்கும்

நியாயங்கள் எப்போதும்
நிதர்சனமாய் இருக்க
அபாயங்கள் இல்லா
அன்பை வழங்குங்கள்

உண்மையே உயிராக
உலகின் மொழியாக
விண்ணைத் தாண்டியும்
விளையணும் நீதியோடு

கவிஞர் கிருஷ் அபி,இலங்கை

# வானம் வசப்படும்

காலங்கள் கரைந்தோடுகிறது
அதில் கவலைகளை
களைத்தெடுக்க கடினப்பட்டு போகிறோம்
நொடிக்கு ஒரு நினைவு மணிக்கொரு மறதி
மாதத்திற்கு ஒரு துன்பம் என
நம் இதயத்தை நாமே ஏழ்மையாக்கி விடுகிறோம்
காக்கை கூட்டுக்குள்ளேதான்
மணிக்குயில் பிறக்கிறது
சேற்றின் வாசத்தில்தான்
செந்தாமரை மலர்கிறது
மூச்சடக்க பயந்தால்
முத்து குளிப்பது சுலபமாகாது
விதைப்போல் விழ வேண்டும்
அழிவதற்காக அல்ல
ஒவ்வொரு முறையும் எழுவதற்காக
வாழ்க்கையில் முயற்சி இல்லையேல்
இதயமே நம்பிக்கையற்றுப் போகும்
விதைக்கவே மறந்துவிட்டு
அறுவடை நாட்களை எதிர்ப்பார்ப்பாயா?
இருட்டே இல்லாமல் போனால்
நீ விடியலைத் தேடி ஓடியிருப்பாயா?
முயற்சிகள் இருக்கிற இடத்தில்தான்
வெற்றிகள் முரசு கொட்டுகின்றன
கொஞ்சம் முயற்சித்து பார்
இமயம் வளைந்துக் கொடுக்கும்
வானம் வசப்படும் .



கவிஞர் ப.ஜெகதீஸ்வரி,ஒ.தண்டரை

# சிரித்து பழகு

தம்பட்டம்
தன் பாட்டில் பாடாது
தான் பட்டபாட்டில்
உரைப்பதுவே தன்மானம்

காற்றின் வேகம்
தாங்காத தேகம்
கடுஞ்சொல் வேகம்
திருப்பித் தரும்

சினத்தீ மூண்டும்
சிந்தித் சிதறாது
சிறகொடித்த கரத்திடம்
சிரித்தே விலகும்!



கவிஞர் ஜெயப்பிரபா,சென்னை 81

# மௌனத்தின் மனம்

மௌனம் பேசியது
மௌனமாய்
வழக்காடும் உள்ளங்களின்
வடிகால் நான்

சிதறும் வேளைகளில்
என் அணைப்பில் சிலர்
வெடிக்காமல் வெம்பிடவும்
என் துணை

ததும்பும் விழிகளும்
தளுதளுப்பில் எனையே சூடி
விழாத துளிகளை புதைத்து
புறநடிப்பில்



தொடுக்காத கேள்விகள்
எத்தனை வண்ணங்கள்

நானும் அமைதிக்குள் முழிக்கிறேன்
உடைபடாத எண்ணங்களின்
குவியல்கள் குறுக்கு நெடுக்கும்
ஊர்வலத்தில்

ஓ...வென்ற கதறலும் சத்தமின்றியே
எத்தனை வலிகள் தாங்குவேன்

இமைநிமிர்த்தா மௌனகரைசல்
சட்டமாயமர்ந்து சதிராடும் போது
தனையே மறக்கும் மனம்


மனசாட்சி விளையாட நான்
பந்தாடப்படுகிறேன்

இப்படிக்கு நான் மௌனம்
மௌனமாய் அலைகிறேன்

கவிஞர் கனகசுந்தரி பாஸ்கரன்,திருப்பூண்டி

# பேசி விடு என்னிடம்

மௌன மொழிகள் போதும்
மழலை சிரிப்பை சிந்தும்,
இதழ்களை திறந்திடு
உரசட்டும் உன் உதடுகள்,
மனதில் ஒழித்ததை இன்று
உதரி விடு,
எதிர் பார்க்கும் என் மனம்
உன் குயிலிசை குரலை எண்ணி,
செவிகள் காத்திருக்கின்றன
உன் இதழ்கள் அசையுமா?



கவிஞர் க.வீரபாண்டி,புளியங்குளம்,மதுரை

# பொன்மாலை பொழுதில்

பணி முடிந்து வீடு திரும்புகையில்
மேகவெடிப்பு மழையாய்
நெஞ்சில் காதலைக் கொட்டுகிறாள்
அந்திச் சூரியஒளியின்
ஒரு துளி சுக்கிலத்தில் பூத்தவள்

என் கருவிழி தளத்திலிருந்து
கோடி காதல் ராக்கெட்டுகள்
பாய்கின்றன
அவள் மேனியெல்லாம்

தங்கமணல் பூமியில் முளைத்திருக்கும்
அவள் பாதஅச்சுகளோடு
என் பாதஅச்சுகளைக்
ஒன்றாய்க் கோர்க்கிறேன்
பிறக்கிறது
ஒவ்வொன்றும் ஒரு குழந்தையாய்.



கவிஞர் ஸ்ரீவி.முத்துவேல்,துபாய்

# உயிரலைகள்

அவன்
முத்தப்பசிக்காரன்


அவள்
உதடுகளில்
உதடுகளால்
ஓவியம் வரையும்
தாரகை

அவன் கைகளில்
தவழும் பூங்காற்று
அவள்

அவள் கண்களில்
தவழும் காதல்
ஊற்று அவன்

இருவிரல் மின்கடத்தலில்
உள்ளங்கை மச்சம்
உயிரோடு பேசத் துடிக்கும்

உலாவும் காற்றில்
உயிரலைகள்
இவர்களுடன்
இணையும் தேடலில்
இதமாய் இசைக்கும்



கவிஞர் ஆர்.மோகன் ராஜ்

# ஓர் இரவின் சிறுகதை

இரவல் ஒளியானாலும்
இரவின் மொத்த நீளத்தையும்
குத்தகை எடுத்தபடி
அதோ அந்த குட்டையில்
நிலவு முகம் பார்த்துக் கொண்டிருந்தது



ஒரு பள்ளத்தாக்கின்
சிற்றோடைக்காக
தவளை ஒன்றின்
தொடர் பிரார்த்தனை
அமிர்தவர்ஷினி
இசைத்துக் கொண்டிருந்தது

காத்திருந்து மலர்ந்த
நிஷாகந்தி ஒன்று
வருடத்தை
கொண்டாடிக் கொண்டிருந்தது

இரவு உறக்கத்தின் கற்கள்
ஓலமிடும் நாய்களை
கடந்து செல்லும்
குறட்டை சப்தத்தில்
குழம்பிக் கொண்டிருந்தன

பூட்டப்பட்ட
இரும்பு கதவுகளின் பின்னால்
ஒரு இராப்பிச்சைக்காரனின்
வயிறு சத்தமிட்டு கொண்டிருந்தது

பூஜ்ய நிலையின்
உச்சம் ஒன்று
சுடுகாட்டு சாம்பலில்
புதுவாழ்வு தொடங்க வேண்டி
புதைந்து கொண்டிருந்தது

பொழுதுகள் தொலைத்த
தூரத்து தாலாட்டு ஒன்று
இரவை உறங்க வைத்த படி
விழித்துக் கொண்டிருந்தது

கவிஞர் அன்னலட்சுமி சரவணன்,ஈரோடு

# நம் எதிரிகள்



தாமதமான உறக்கமும்
அதிகாலை எழா சோம்பேறித்தனமும்
இயற்கையை மறந்த விதமும்
செயற்கையை கொண்டாடும் மனமும்
வெளியே செல்லத் தடுக்கும் அச்சமும்
உள்ளே முடங்கச் சொல்லும் இயலாமையும்
பழமையை வெறுத்த மனமும்
பதுமையை விரும்ப வைத்த நாகரிகமும்

கையூட்டு தந்திடும் கரங்களும்
சிபாரிசு தேடிடும் புன்னகையும்
இயலாமையை வெளிப்படுத்தும் கோபமும்
கருணைதனை தொலைத்த அன்பும்
பகட்டை நாடிய கண்களும்
சுகத்தை எதிர் நோக்கும் மனமும்
தானமது கொடுத்திடா கரங்களும்
உதவி தேடி அலையும் கால்களும்

ஏளனப் பார்வையில் துவளும் மனமும்
கண்ணியம் தவறும் ஒழுக்கமும்
நான் எனும் அகந்தையும்
பிறர் நலன் விரும்பா ஆசையும்
சாதி மதம் எனும் பித்தும்
சாத்வீகம் மறந்த நெஞ்சமும்
மேலோர் கீழோர் என்ற பாகுபாடும்
உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற இறுமாப்பும்

கனவுகளில் சுகத்தை தேடுவதும்
நனவினில் உறக்கத்தை தேடுவதும்
வாய்ப்பை முறையாய் பயன்படுத்தாமையும்
அவரவர் மனதை முறையாய் பண்படுத்தாமையும்
பெண்டிரை சிறுமைப் படுத்துவதும்
பெற்றவர்களை அன்பு பாராட்டா மனமும்
பண்பு பாசம் மறந்திட்ட உள்ளமும்
பாசாங்குடன் நடித்திடும் நெஞ்சமும்

தோல்வி கண்ட மனமும்
தன்னம்பிக்கையற்ற குணமும்
சொல்ல சொல்ல குறைவில்லை
தெளிந்தால் என்றும் நிறையாகும்
வேண்டா எதிரிகளை அப்புறப்படுத்தி
அன்பால் அகிலத்தை செம்மைப்படுத்துவோம்!

கவிஞர் இரா.கோமதி,பொள்ளாச்சி

# அம்மா



வலித்த போதெல்லாம்
அம்மா என்று கதறியவன்
இனி அம்மா என்ற வார்த்தை கேட்டாலே
வலியால் உள்ளம் கதறிவிடுமே
தயவு செய்து
மீண்டும் வந்து விடேன்.

கவிஞர் மா.பாலகுமரன்

# முடிவுக்கு வருமா பட்டாசு விபத்துகள்?

அடை மழைக்கால ஐப்பசியில் தீபாவளி!
வெடிவகைகள் பற்பலவாய்! விற்பனை களைகட்டும்!
எண்ணிலா மகிழ்வளிக்கும் பிள்ளைகள் யாவர்க்கும்!
பிள்ளைகளின் மகிழ்வுகண்டு பெற்றோரும் அகமகிழ்வர்!
பட்டாசு உற்பத்தியில் பலலட்சம் தொழிலாளர்
கிட்டும் ஊதியத்தில் அன்றாடக் கூலிகளாய்!
வானம் பார்த்த பூமிதனில் வாழ்வதனால்
பலரின் வாழ்வாதாரம் பாதுகாப்பற்ற இத்தொழிலே!
கனத்த இதயத்துடன் கந்தகத்தை அடைக்கின்றார்!
அன்றாடச் செய்திகளில் அதிகமாய் வெடிவிபத்தே!
உரிமத்தைப் புதுப்பிக்கத் தவறிய ஆலைகளில்
உற்பத்தி செய்கின்றார் பெருமளவில் பட்டாசை!
குறுகிய இடங்களில் அதிகமான ஆட்கள்!
உரசும் இரசாயனங்கள் உருவாக்கும் தீவிபத்தில்
கருகிய திரிகளாய் தொழிலாளர் மடிகின்றார் !
உறவுகளை இழந்தவர்கள் உருக்குலைந்து போகின்றார்!
பெருந்துயரம் இதுவன்றோ? பேரிழப்பில் குடும்பங்கள்!
கிடங்குகளில் அளவுக்கு அதிகமாய் சேமிப்பு!
உற்பத்திக் கழிவுகளை உடனுக்குடன் அகற்றாமை
நீர் நிரப்பிய லாரிகளை, தீத்தடுப்புக் கருவிகளை,
உரிய இடங்களில் வைத்திடத் தவறுதல்,
தரத்தை சோதிக்க தகுந்த இடமின்மை
அரசு தரப்பில் குறைபாடுகளைக் கண்டறிந்து
உரிய நடவடிக்கை எடுக்காத அவலநிலை
இவையெல்லாம் காரணமாம் இத்துயர நிகழ்வதற்கு!
கள்ளச்சாராய மரணங்களுக்கு கணிசமான இழப்பீடு!
உள்ள மகிழ்வளிக்கும் பட்டாசை உருவாக்க
உயிரைப் பணயம் வைத்து உழைப்போர்க்கு
உரிய பாதுகாப்பும், இழப்பீடும் அவசியமே!
கடுமையான நடவடிக்கை எடுத்தாலே இத்துயரம்
முடிவுக்கு வந்திடுமே! முன்வருமா அரசாங்கம்?



கவிஞர் ஈ.சீ.சேஷாத்ரி

# கலிகாலம்

என்ன நடக்குது நாட்டிலே மனித மனம் ஏட்டிலே
ஆணும் பெண்ணும் யார் யாரோ அறிந்ததால் நீ யாரோ
பழமை அறிவு மழுங்கியது புதுமை அறிவு வளர்ந்தது
தேடாத தேன்கூடு போல் கொட்டுதே தேனீ கூட்டங்கள்
அறிவுடைமை ஆக்கம் இல்லை அறியாமை நாட்டமில்லை
நாடும் ஏடும் ஒன்றென ஒப்பாரி பல கட்சி என
தீண்டாமையும் சனாதனம் ஒன்றிணைந்ததோ
ஒவ்வாமையில் இன்று
யாருடா நீங்கள் மனித மனம் நாங்கள்
யாரால் வந்தது எதற்காக தீட்டப்பட்டது
போராடிய கூட்டங்கள் ஒய்ந்ததால்
மீண்டும் பிறக்குதா உங்கள் சனாதனம்
நாளைய தேதி உனக்கே
மீதி அறிந்து கொள்ளடா மடையனே
போராடு வாளோடு வாய்மொழியும் உன் நாடோடு
நாளைய புரட்சி நீயே வளர்ச்சி
சிந்தித்துக் கொள் சிறகை விரிக்க
புரட்சிக் கொள் புதுமை படைக்க
உன் உழைப்பே உன் வரலாறின் செழிப்பே



கவிஞர் ம.செல்லமுத்து,நூத்தப்பூர்

# விரில்

அந்த இரவில் வெள்ளை, செவலை, கருப்பு என
நட்புடன் துள்ளித் திரிந்த நாய்கள்
இணைப்புச் சாலையிருந்து
நெடுஞ்சாலையில் சங்கமிக்கும் போது
முதன் முதலில் பார்த்த வாயில்லா
ஜீவனின் முகம் நொடியில் ஆனது
நினைவின் புகைப்படமாய்
"விரில் " என்று எழுந்து அடங்கியது
கருப்பு நாயின் சத்தம்,
என்ன சொல்வது,
இன்னும் இரவு நேரத்தில்
கருப்பு நிறம் சரியாக தெரிவதில்லை ?
அல்லது
வெள்ளைக் கோடிட்ட தார் சாலைகள்தான்
மகிழ்முந்தின் கண்களுக்குப்
புலப்படுவதில்லையா ?



கவிஞர் இரா.மதிராஜ்,காங்கேயம்

# வாழ்க்கை என்னும் கவிதை

**அத்தியாயம் -7** **மாலையும் கழுத்துமாக**

காலையிலே குளித்து முடித்து விட்டு புத்தாடை உடுத்திக்கொண்ட போது "அப்பா எங்கே கிளம்பிட்டே?" எழுந்து கண்ணைத் துடைத்துக் கொண்டு வந்தாள் திவ்யா.
"அப்பா வெளியே போயிட்டு வர்றேம்மா. நீ சித்தப்பாவுடன் போய் சாக்லேடு வாங்கிட்டு வர்றியா"
"ஏண்டா அவளையும் கூட்டிண்டுப்போலாமே" என்றாள் சிவாவின் அம்மா கோகுலம்மாள்.
"வேண்டாம்மா. தம்பி கோயிலுக்கு வர வேண்டாம். இவளைப் புறப்பட வைத்து நேரே புவனா வீட்டிற்கு வந்துடட்டும். நானும் புவனாவும் மாலைப் போட்டுக் கொண்டு நிற்கிறதும்... நான் தாலி கட்டிறதும் எனக்கென்னவோ திவ்யா பார்க்க வேண்டாம்னு தோணுது."
"பரவாயில்லை. எப்போதாவது தெரிந்து தானே ஆகவேண்டும். இப்போதே அவளுக்கும் கொஞ்சம் புரிய வேண்டியதுதானே நல்லது என்று நினைக்கிறேன்."
"வேண்டாம்மா. புவனா எங்களோட இருக்கும்போது கொஞ்சம் கொஞ்சமா திய்வாவிற்கு புரியட்டும்."
"சரி"

"பாப்பா அப்பா வெளியே கிளம்பறேன். நீ குளிச்சு புது டிரஸ் போட்டுக் கொண்டு சித்தப்பாக் கூடப் போய் சாக்லேட் வாங்கிக் கொண்டு வா. நாம போய் அத்தா வீட்டிலே சாப்பிட போகலாம். அங்கே பாயாசம், அப்பளம் எல்லாம் இருக்கும்."
"ம்கூம்.. நானும் இப்ப உங்கூட வருவேன்"
"சொன்னாக் கேளு. அப்பாவுக்கு நெறய வேலையிருக்கு"
"நான் பாட்டிக் கூட நிக்க மாட்டேன். நானும் உங்கூடத்தான் வருவேன்."
"சரி. குளிச்சு டிரஸ் பண்ணு கூட்டிட்டுப் போறேன்."
"நீ என்னைத் தூக்கிக் குளிப்பாட்டு. இல்லேன்னா நீ என்னய உட்டுட்டு போயிருவே"
"திவ்யா அப்பா சொன்னா கேக்கணும்"

"ம்கூம். நானும் வர்றேன்" கோகுலம்மாள் திவ்யாவை பிடுங்க முயற்சிக்க, "வரமாத்தேன் போ." என்ற வாறு சிவாவின் கழுத்திக் கட்டிப்பிடித்துக் கொண்டது.

**இரஜகை நிலவன்**

# வாழ்க்கை என்னும் கவிதை

அத்தியாயம் -7

## மாலையும் கழுத்துமாக

"சரி, நான் கிணற்றுக்கு வருகிறேன். உன் பக்கத்திலேயே நிற்கிறேன். பாட்டி உன்னைக் குளிப்பாட்டட்டும் சரியா கண்ணு" கோவத்தை அடக்கிக் கொண்டான் சிவா.
"ம்...ம் சரி." என்று தலையாட்டினாள் திவ்யா.
திவ்யாவிற்கு புத்தாடை உடுத்தி அவளையும் தூக்குக் கொண்டான் சிவா. வீட்டின் முன்னால் வந்த டாக்ஸியில் எல்லோரு ஏறிக்கொள்ள கார் கோயிலை நோக்கி ஓடியது.
புவனாவின் குடுப்பம் ஏற்கனெவே கோயிலில் குழுமியிருந்தார்கள். திவ்யா இறங்கி ஓடிப்போய் "அத்தா" என்று புவனாவைக் கட்டிக் கொண்டாள்.
புவனா மாலையும் கழுத்துமாக நிற்கிறதால் முழந்தையை தூக்க முடியாமல் நின்றாள்.
"அத்தா இப்ப உன்னைத் தூக்க முடியாது வந்துரு" கோகுலம்மாள் திவ்யாவை தூக்கினாள்.
"விடு பாட்டி நான் அத்தா கிட்டயே நிற்கிறேன்" குழந்தை அடம்பிடித்தது.
"மாலையை மாத்திக்கோங்க" அர்ச்சகர் சொல்லவும் திவ்யா திரும்பிப் பார்த்து "அய்ய் அப்பாவும் மாலை போட்டிருக்கு" திவ்யா சிவாவிடம் கையை விரித்துக் கொண்டு ஓடினாள்.
"அப்பா பூஜை செய்யட்டும் தொந்தரவு செய்யாதே" சிவாவின் தம்பி குமார் திவ்யாவை தூக்கினான்.
"என்னை விடு சித்தப்பா. நான் அப்பாகிட்ட போறேன்" குழந்தை குமாரிடம் இம்சை பண்ணியது.
குமார் அவளை இறுக்கிப் பிடித்துக் கொள்ள "ஓ" வென்று அலறிய திவ்யா குமாரை உதறிக் கொண்டு சிவாவிடம் ஓடி வந்தாள்.
சிவா ஓடி வந்த திவ்யாவைத் தூக்கிக் கொண்டு அருகில் நின்ற புவனாவைப் பார்த்தான்.
புவனாவின் கண்களில் முட்டிக்கொண்டு நின்ற கண்ணீர் திரண்டு கன்னத்தில் வழைந்தது.
அருகில் வந்த சிவா வேறு யாருக்கும் கேட்காதவாறு "இப்போது வேண்டுமானாலும் திருமணத்தை நிறுத்தி விடலாம். புவனா இத்தனைப் பிரச்சினைகள் வருமென்று நான் எதிர்பார்த்ததுதான்" என்றான்.
கண்ணகளைத் துடைத்துக் கொண்டு பரவாயில்லை அத்தான்" என்றாள் புவனா.

இரஜகை நிலவன்

# வாழ்க்கை என்னும் கவிதை

**அத்தியாயம் -7** **மாலையும் கழுத்துமாக**

"ராகு காலம் வருவதற்கு முன் தாலி கட்டி விட்டால் உத்தமமாக இருக்கும். முதலில் மாலையை மாத்திக்கோங்க" என்றார் அர்ச்சகர்.
எதிலும் ஈடுபடாமலிருந்த திவ்யா "அப்பா நீயும் அத்தாவும் ஏன் மாலை போட்டிருக்கீங்க?" என்றாள். பூ இதழ்களை மாலையிலிருந்து பிய்த்தவாறு.
"அது... கண்ணுக்குட்டிக்கு தெரியாதா? அத்தாவை உன் அம்மா ஆக்கிக் கொள்வதற்கு தான்" என்று பொறுமையாக திவ்யாவின் கன்னத்தில் முத்த மிட்டான்.
"அத்தா ஏன் அம்மாவாகணும். அம்மாதான் கடவுள் கிட்ட பொம்மை வாங்கிண்டு வரப் போயிருக்காயில்லியா?"
"அது..அது.. அம்மா வரதுக்கு நாளாகுமில்லியா கண்ணு"
"அப்படியா? ஆமா... நான் இப்ப என்ன செய்யணும்.. என்ன இப்படியே வச்சுகிறியா? ரொம்ப நல்லாயிருக்கு"
"இல்லை கண்ணு அப்பாவும் அத்தாவும் பூஜை பண்ணணும் கடவுள் கிட்டே கேட்டு இந்த திவ்யாவிற்கு சாக்லேட் கேட்டு வாங்கித் தரணும்"
"எனக்கு இவ்ளோ பெரிய சாக்லேட் தர்றியா" கையை விரித்துக் காட்டினாள்.
"கொஞ்சம் நீயும் சித்தப்பாவும் போய் கடையிலே சாக்லேட் வாங்கிட்டு வர்றீங்களா?" திவ்யாவை கீழே இறக்கி விட்டான்.
"அப்பா நான் இங்கேயே நின்னுகிறேன். சித்தப்பாவை சாக்லேட் வாங்கி வரச் சொல்றியா"
"சரி"
"சீக்கிரம் மாலையை மாத்திக்கோங்கோ" என்றார் அர்ச்சகர்.
திவ்யா, புவனாவிடம் வந்து "ஏன் அத்தா பூமாலை யெல்லாம் போட்டிடுக்கே" என்று திரும்பவும் பூதம் கிணறு வெட்ட ஆரம்பித்தாள்.
சிவாவிற்கு பொங்கி வந்த கோவத்தை அடக்கிக் கொண்டு மாலையை மாற்றினான். புவனாவும் மாலையை மாற்ற "அய்" என கை கொட்டி சிரித்தாள் திவ்யா.
புவனாவின் அம்மா அருகில் வந்து "ராகு காலம் வர்றதுக்கு இன்னும் பத்து நிமிசந்தான் இருக்கு. தாலியை எடுத்து கொடுங்க "என்றாள்
அர்ச்சகர் திரும்பி சிவாவைப் பார்க்க "எல்லாம் கொஞ்சம் வேகமாக நடக்கட்டும்." என்றான் பொதுவாக.
உடனடியாக அர்ச்சகர் தாலியை எடுத்து நீட்ட "அது என்னது?"

இரஜகை நிலவன்

# வாழ்க்கை என்னும் கவிதை

**அத்தியாயம் -7** **மாலையும் கழுத்துமாக**

அருகில் வந்த திவ்யா.
"இந்தா சாப்பிடு" என்று ஒரு வாழைப்பழத்தை எடுத்துக் கொடுத்தார் அர்ச்சகர்.
திவ்யா"அந்தத்தட்டைக்காட்டு"என்றாள்.
"பொண்ணுநீரொம்பத்தொந்தரவுசெய்றே.
அங்கேபோய்நில்லு"என்றார்அர்ச்சகர்.
சிவாவிடம்ஓடிவந்ததிவ்யா
"அப்பாஅந்தந்தட்டிலேஎன்னஇருக்கிறதுன்னுகாட்டச்சொல்லேன்"என்றாள்.
அர்ச்சகரைப்பார்த்தான்சிவா. அவர்தட்டைஎடுத்துநீட்ட,
சிவாஅதைவாங்கிதிவ்யாவிடம்காட்டினான்.
மஞ்சள்கயிறுதேங்காய், பழம்எல்லாம்எதுக்குவச்சிருக்குப்பா?"
"சும்மா"
அப்படியா. ஆமாஇனிஎன்னச்செய்யப்போறே?"
"பார்த்துண்டேயிருகொழந்தைன்னா.....போய்சித்தப்பாகூடசாக்லேட்வாங்கிண்டுவா.
இப்படிஏதாச்சும்வம்புபண்ணிண்டேயிருந்தேஉன்னைபூதத்திடம்புடிச்சிகொடுத்திடவேண்டியதுதான்." என்றார்அர்ச்சகர்.
"அப்பா" என்றுபயந்துகொண்டேசிவாவிடம்வந்தாள்திவ்யா.
"உண்மையிலேநீபயப்படாதேகண்ணு" என்றான்சிவா.
'என்னநினைத்தாளோஇல்லைபயந்துபோனாளோ'ஓடிப்போய்சித்தப்பாவிடம்ஒட்டிக்கொண்டாள்.
சிரித்துக்கொண்டே தாலியை நீட்டினார் அர்ச்சகர். எடுத்துத் திரும்பிய சிவா புவனாவின் முகத்தைப் பார்த்தான்.
இவ்வளவு நேரம் நடந்த கலட்டாவையும் மீறி அவள் முகத்தில் புன்னகை படர்ந்தது.
அருகில் கண்ணால் அழைத்தான் சிவா. புவனா அருகில் வர, எல்லோர் முகத்திலும் சலனங்கள் கலைய தாலியைக் கட்டினான் சிவா.
எல்லோர் கைகளில் இருந்த அட்சதையை தூவ, அங்கே இறுகிப் போயிருந்த மௌனம் கலைக்கப் பட்டு மெதுவாக கலகலப்பு ஏற்பட்டது.
"சித்தப்பா இவ்ளோ பெரிய சாக்லேட்" என்று கையை விரித்துக் காட்டினாள் திவ்யா.
"கடைக்குப் போவோமா?" என்று கேட்டவாறு திவ்யாவைத் தூக்கிக் கொண்டு கிளம்பினான் சிவாவின் தம்பி.

இரஜகை நிலவன்

# வாழ்க்கை என்னும் கவிதை

**அத்தியாயம் -7**

**மாலையும் கழுத்துமாக**

"புவனா நான் பணம் புரட்டி வச்சிருக்கேன். வீணாகக் கவலைப் படாதே" என்றாள் அம்மா. "எப்படி?" என்றாள் புவனா.

"என் கழுத்தில் கிடந்த தாலியை அடகு வைத்தேன்" என்று அம்மா சொன்ன போதுதான் அம்மாவின் கழுத்து வெறுமனே இருப்பது புரிந்தது.

"இப்படியெல்லாம் இந்தக் கல்யாணம் நடக்க வேண்டுமா?"

"சீ! இந்த மாதிரி சும்மாச் சும்மா அழக்கூடாது. போய் புறப்படுகிற வழியைப் பார்." என்று புவனாவை அனுப்பி விட்டு சிவாவின் அம்மாவிடம் வந்து "இந்தாங்க நான் சொன்னப் பணம் ரூபாய் இருபத்தையாயிரம்" என்று கொடுத்து விட்டு "புவனாவின் கழுத்தில் இருபத்தைந்து பவுனுக்கு தங்கம் போட்டிருக்கிறேன். அதைப் பார்த்துக்கொள்ளுங்கள். அப்புறம் புறப்படும் போது வீணாக சல சலப்பு காட்ட வேண்டாம்" என்றாள்.

"அதெல்லாம் சரி. மறு வீடு காண எத்தனை பெட்டி சரி செய்திருக்கே?"

"வாங்க, அதையும் காட்டி விடுகிறேன். அப்புறம் சீர் சரியாகச் செய்ய வில்லைன்னு என் பொண்ணு பெறகு கண்ணைக் கசக்கிக் கிட்டு வந்து நிக்க வேண்டாம்." என்று சிவாவின் அம்மாவை அழைத்துச் சென்று சீர் வரிசையைக் காட்டினாள்.

…………

"இந்தா இருக்கு", "கட்டில் மெத்தை….

"வெளியே வண்டியிலே வச்சிருக்கேம்மா", "சரி முறுக்குப் பெட்டி இருபத்திரண்டு வைக்கச் சொன்னேனே. இருபதுதானே இருக்கு"

"இன்றைக்கு சந்தையிலே பெட்டிக்கு அலைஞ்சேன் மைனி கிடைக்கலே. நான் வேணும்னா பையிலே போட்டு அனுப்பறேன்."

"அதெப்படி நான் எவ்வளவு நாளைக்கு முன்னாலே சொன்ன விசயம்? நீ எல்லாம் சிவா வீட்டுக்குத்தானேண்ணு இளக்காரமாக உட்கார்ந்திருந்தே அப்படித்தானே?", "அய்யோ அப்படியெல்லாம் இல்லை மைனி" என்று புவனாவின் அம்மா பதற, அங்கே திருமணத்திற்கு வந்திருந்த பெண்மணி கூட்டத்திலிருந்து "என்னவோ புது மாப்பிள்ளை கல்யாணம் மாதிரி ரொம்பாத்தான் அலட்டிக்கிறாங்க. இரண்டாந்தரக் கல்யாணம் தானே" என்று சொல்ல "அது எவடி சொன்னது எம்பையன் எப்பவும் புது மாப்பிள்ளைத் தாண்டி" என்று கத்தினாள்.

பின் மெதுவாக "சரி..சரி பொண்ணையும் மாப்பிள்ளையையும் ஒழுங்காக அனுப்பி வைக்க பார்" என்றாள்.

**…தொடரும்**

இரஜகை நிலவன்

# தொல்காப்பியர்

கட்டுரை



தமிழ் நூல்களில் மிகவும் தொன்மை வாய்ந்தது தொல்காப்பியம். இந்த இலக்கண நூலை இயற்றியவர் தொல்காப்பியர். தொல்காப்பியரை அகத்தியரின் 12 சீடர்களில் ஒருவர் என்றும் கூறுவர்.

தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என மூன்று பிரிவுகளைக் கொண்டது. ஒவ்வொரு பிரிவும் ஒன்பது இயல்களைக் கொண்டதாகும். (3 x9 = 27)

எழுத்தும் சொல்லும்: தமிழ் மொழியின் சிறப்பையும் அமைதியையும் தமிழ்மொழியின் உயர்வையும் காட்டுகிறது.

பொருள்:தமிழ் மொழி பேசும் மக்களின் ஒழுக்கத்தையும் ஒழுகலாறுகளையும் சிறப்பித்துக் காட்டுகிறது. உலக மொழிகள் எதிலும் இல்லாத சிறப்பு பொருள் இலக்கணத்தில் தமிழில் மட்டுமே அமைந்துள்ளது.

தமிழுக்கே சிறப்பு தரும் 'அகம், புறம்' தமிழரின் சிறப்பை - உலகிற்கே உணர்த்துகிறது.

அகம்: தலைவன், தலைவி உள்ளங்கள் அன்பினால் ஒன்றி மனமொத்து வாழும் இல்லற இன்பம்,

புறம்: போர், கொடை சிறப்புக்கும் உரமூட்டின.

வெற்றி சிறப்பு, நாட்டின் சிறப்பு பற்றி கூறுவது அகம் வீடு, புறம் நாடு அதாவது, அகவாழ்வு வீட்டு இன்பத்திற்கும் புறவாழ்வு நாட்டு காதல் பற்றிய அகப்பாடல்களில் நுட்பமானவரையறை கையாளப்பட்டது.

# தொல்காப்பியர்

கட்டுரை

அதாவது, காதல் கவிதைகளில் காதலர்கள் பெயரைக் கூறும் வழக்கம் இல்லை. அதை:

"மக்கள் நுதலிய அகனைந் திணையும் சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறாஅர்" என்று தொல்காப்பியர் கூறுகிறார்.

தொல்காப்பியருக்கும் முன்னரே பல தமிழ்ச்சான்றோர்கள் வாழ்ந்திருந்து, பல இலக்கியங்களைப் படைத்திருந்ததை,

"எள்ளினின்று எண்ணெய் எடுபடுவதுபோல இலக்கியத்தினின் றெடுபடும் இலக்கணம்" என்று கூறுகிறார்.

தொல்காப்பியருக்கு முன்பிருந்த புலவர்களை அவர் குறிப்பிடுகையில் பல இடங்களில் "என்பனார், என்ப, மொழிபப் புலவர்,யாப்பறிபுலவர், நூல் நவில் புலவர்" என்று தம்முன்னோர்கள் இலக்கியங்களைப் பல படைத்துள்ளார்கள் என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார் தொல்காப்பியர்.

தமக்கு முற்பட்ட இலக்கிய மரபினையும் இலக்கியங்களையும் "நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும் பாடல் சான்ற புலனெறி வழக்கம்" என்று பொருளதிகாரத்தில் குறிப்பிடுகிறார்.

இதனால், தமிழினம் மூத்தக்குடி என்பதையும், தமிழ்மொழி, மூத்த மொழியென்றும், தமிழ் மொழியில் சிறந்த இலக்கியங்களைப் படைத்த தமிழ்ச் சான்றோர்கள் உலகம் தோன்றிய காலம் முதலே ஒப்பற்று சிறந்து விளங்கியிருந்ததையும்

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளொடு
முன்தோன்றி மூத்தக்குடி" என்பதையும் பிற்கால சந்ததியாருக்குத் தம் நூலின் மூலம் எடுத்துரைக்கிறார்.

# தொல்காப்பியர்

## கட்டுரை

சமயம்: தொல்காப்பியரை 'சமணர்' ஆக இருக்கலாம் என்று வையாபுரிப்பிள்ளை கூறுகிறார். "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்" என்ற தொடரால் அவர் சமணர் அல்லது பௌத்தர் ஆக இருக்கலாம் என்று டாக்டர் பர்னர், கூறுகிறார்.

காலம்: 'தொல்காப்பியரின் காலம்'

1. அவர், பதஞ்சலிமுனிவருக்கு முற்பட்டவர் என்று சீனிவாசப் பிள்ளை கூறுகிறார்.

2. வேதகாலத்துக்கு முற்பட்டவர் என்று மறைமலை அடிகளார் கூறுகிறார்

3. தொல்காப்பியம், வியாசர் வேதத்துக்கு முன்பே எழுந்தது என்று, டாக்டர் உ.வே.சாமிநாத ஐயர் கூறுகிறார்.

எனவே இந்த ஆய்வுகளின் படி தொல்காப்பியர், கிறிஸ்து பிறப்பதற்கு முன் (500) அல்லது (700) ஆண்டுகட்கு முன்பு வாழ்ந்தவர் எனக் கருதப்படுகிறது.

தமிழ்மொழி உயர்வுக்கும் தமிழினத்தின் சிறப்புக்கும் நமக்கு ஆதாரச் சின்னமாக உலகப்புகழை ஈட்டித்தந்துள்ளது தொல்காப்பியம். 1610 சூத்திரங்கள் கொண்ட இந்நூலில் தமிழுக்குச் சிறப்பு தரும் பிறப்பியலில் ஒலிகளின் அமைப்பு முறையும் ஐவகை நிலங்கள், கரு, உரிப்பொருள்களின் பாகுபாடு முறைகளை விளக்கித் தமிழுக்கும், தமிழருக்கும் பெருமை சேர்த்த தொல்காப்பியருக்கு நாம் என்றும் நன்றியை உரித்தாக்கக் கடமைப்பட்டுள்ளோம். தமிழுக்குத் தொண்டு செய்த தொல்காப்பியர் புகழ் சூரிய ஒளிபோல் ஒளிரும்.

நன்றி :1. தமிழ் வளர்த்த தமிழ்த் தொண்டர்கள்,டாக்டர் அறிவுச்சுடர்
2. வலைத்தளம்

அ வில்சன்,இதழாசிரியர்


அகர முதல நாளை நமதே
எத்தனை கைகள் உன்னை
கை விட்டாலும் உன் நம்பிக்கை
உன்னை கை விடாது..!
Aagaramuthalaa
www.அகரமுதல.com

அகமும் தமிழே! முதலும் தமிழே!!

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு"

என்றும் தலைப்பணியாம் தமிழ்ப்பணியில்,

அகர முதல செய்திக்குழு | அகர முதல இலக்கிய பேரவை
அகர முதல கல்விக்குழு | சிவம் அறக்கட்டளை.

தொடர்பிற்கு:

9597887847/8870884969

www.அகரமுதல.com

Aagaramuthalaa

aagaramuthala@gmail.com